18th July 1957]

Mr. SPEAKER : ஒவ்வொரு ஜில்லாவையும் பற்றிக் கேட்டால் சொல்ல முடியுமா ?

Sri R. SRINIVASA IYER : Will the Government please explore the possibilities of getting these catamarans at cheap prices from Andamans and other islands under the control of Government of India ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : That will be considered.

Sri P. M. MUNUSWAMI GOUNDER : சர்க்காரிலிருந்து கட்டுமரங்கள் போன்ற வசதிகள் கொடுப்பதற்கு முன்பு இந்த மீன் பிடிப்பவர்கள் நல்ல முறையில் மீன் பிடித்தும் அவர்கள் ஒழுங்கான முறையில் கடலுக்கு அருகாமையில் பக்கத்தில் இருந்துகொண்டு மீன் பிடித்து தங்கள் வாழ்க்கை தரத்தை வளர்த்து வந்தார்கள். ஆனால் தற்போது நமது அரசாங்கத்திலிருந்து அதிகமான சலுகைகள் கொடுப்பதால் அவர்கள், பொழுது போக்கிற்காக உட்காரும் மெரினு போன்ற இடங்களில் சுகாதாரத்திற்கு விரோதமான முறையில் நடப்பது சர்க்காருக்கு தெரியுமா? அப்படி தெரிந்திருந்தால் அதன் மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கிறது ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : அரசாங்கம் உதவி செய்வதால் அவர்கள் ஒழுங்கீனமாக நடந்து கொள்ளவில்லை. அவர்கள் தொழில் அபிவிருத்திகாகவே உதவி செய்யப்படுகிறது.

Sri M. JAGANNATHAN : கட்டுமரங்கள் உபயோகப்படுத்தி மீனவர்கள் அதிகமாக மீன் பிடித்து தங்களுடைய வாழ்க்கையை நடத்த முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு பாப்லோ என்ற விசை படகுகளை வாங்கிக் கொடுத்து உதவி செய்வார்களா ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : விசை படகு இப்பொழுது கொடுத்திருக்கிறார்கள். இன்னும் கொடுக்க உத்தேசம் இருக்கிறது.

Sri K. B. S. MANI : இந்தக் கட்டுமரங்கள் சிலோனிலிருந்து 9.40
பிளாக் மார்க்கெட்டில் தஞ்சை, நாகப்பட்டிணம், திருநெல்வேலி ஜில்லாக் a.m.
களுக்கு வருவது அரசாங்கத்தாருக்குத் தெரியுமா ? கவர்ன்மெண்டிலே கொடுக்கப்படுகிற கட்டுமரங்களை வாங்கி தனிப்பட்ட ஒரு சிலருக்கு அதிக விலைக்கு விற்றது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படித் தெரிந்திருந்தால், அதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : பிளாக் மார்க்கெட் செய்வது சர்க்காருக்குத் தெரிந்து செய்கிற விஷயமல்ல. அப்படித் தெரிந்தால், அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

Sri T. S. RAMASWAMY PILLAI : கன்னியாகுமரி ஜில்லாவில் கட்டு மரங்களுக்கு வேண்டிய கட்டைகள் கேரளாவிலிருந்து இது வரையில் வந்து கொண்டிருந்தன. இப்போது அவைகளை சப்ளை செய்து வரும் வியாபாரிகள் இவ்வாறு செய்வதிலிருந்து தடைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படித் தெரிந்திருந்தால், கேரளாவிலிருந்து கட்டைகள் வரச் செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : இது வரையிலும் கன்னியாகுமரி ஜில்லா திருவாங்கூர் சர்க்கார் ஆட்சியில் இருந்ததால், அங்கிருந்து கட்டைகள் வந்துகொண்டிருந்தன. இனிமேல், அப்பொறுப்பை சென்னை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு வேண்டியதைச் செய்யும்.

Srimathi T. N. ANANDANAYAKI : கட்டுமரங்கள் வினியோகிப்பதில் அந்த இனத்தைச் சேர்ந்த அரசியல் தியாகிகளுக்கு அவைகளை இலவசமாகக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?